(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 376/2023 அ.சா.6

Name : **திருமதி. வெள்ளையம்மாள்**

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026.

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மேலவளவு, சோமகிரிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1வது எதிரியை எனக்கு தெரியும். அவர் என் வீட்டிற்கு பின்பு குடியிருந்து வருகிறார். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. எனது அண்ணன் பெரியகருப்பனை 1வது எதிரி கருங்காலக்குடி அரசு மருத்துவமனைக்கு வரச்சொன்னதாக எனது அண்ணன் பெரியகருப்பன் எனது தகப்பனாரிடம் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு காலை 11.00 மணியளவில் 1வது எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டிச் செல்ல அவருக்கு பின்பு எனது அண்ணன் உட்கார்ந்திருக்கவும், எனது அண்ணனுக்கு பின்பு மற்றொருவர் உட்கார்ந்திருந்ததையும் எனது சித்தப்பா பார்த்துள்ளார். எனது அண்ணன் பெரியகருப்பன் காலை 10.00 மணியளவில் எனது கணவருக்கு போன் செய்து ஒரு பிரச்சனை வா மாமா என்று சொல்லியுள்ளார். அதற்கு எங்கு வரவேண்டுமென்று கேட்டதற்கு நான் சிறிது நேரத்தில் வந்துவிடுகிறேன் என்று எனது கணவரிடம் எனது அண்ணன் பெரியகருப்பன் சொன்னார். அதுபோல் எனது மாமாவிற்கும் எனது அண்ணன் போன் செய்து ஒரு பிரச்சனை வா என்று சொல்லியுள்ளார். அவர் இருசக்கர வாகனம் இல்லை என்றும் இருசக்கர வாகனம் வந்தவுடன் வருகிறேன் என்று சொல்லியுள்ளார். நான் எனது

அண்ணனுக்கு மதியம் 01.00 மணியளவில் எனது தகப்பனாருடைய போனிலிருந்து போன் செய்தபோது ஸ்விட்ச் ஆப் என்று வந்தது. நாங்கள் சென்று வைரவன்பட்டி, மொல்லாமலை ஓரத்தில் எனது அண்ணன் பெரியகருப்பன் இரத்த வெள்ளத்தில் உடல் முழுக்க காயத்துடன் கிடந்தார். பிறகு ஆம்புலன்ஸ் வந்து எனது அண்ணனை ஏற்றி மேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். எனது அண்ணனுடைய இருசக்கர வாகனமும், 1வது எதிரியினுடைய இருசக்கர வாகனமும் கருங்காலக்குடி அரசு மருத்துவமனையில் இருந்தது. 1வது எதிரி எங்கள் வீட்டிற்கு பின்பு குடியிருக்கிறார். நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து பார்த்தபோது 1வது எதிரி வீட்டில் யாரும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

Sd/- **வெள்ளையம்மாள்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.10 06:18:19 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.